

**டாக்டர். அ. அருண் தம்புராஜ்**

# BEST COLLECTOR

**டாக்டர். அ. அருண் தம்புராஜ்**, இ.ஆ.ப., அவர்கள் கடந்த 17.06.2021 முதல் நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சித் தலைவராக பணிபுரிந்து வருகிறார். மாற்றுத்திறனாளிகள் நலனில் மிகுந்த அக்கறை கொண்டு மாற்றுத்திறனாளிகளுக்கான திட்டங்களை தனி கவனத்துடன் சிறப்பாக செயல்படுத்தி வருகிறார். நாகப்பட்டினம் மாவட்டத்தில் அரசு அலுவலகங்கள், பேருந்து நிலையங்கள், ஒருங்கிணைந்த நீதிமன்றம், அரசு மருத்துவமனைகள், பள்ளிகள், காவல் நிலையங்கள் ஆகியவற்றில் மாற்றுத்திறனாளிகளுக்கான தடையற்ற சூழ்நிலையுடன் கட்டிடங்கள் கட்டுவதற்கு சீரிய முயற்சி மேற்கொண்டுள்ளார். நபார்டு திட்டத்தின் கீழ் 7 அரசு கட்டிடங்களில் தலா ரூ.1.5 லட்சம் மதிப்பிலான சாய் தள வசதி ஏற்படுத்துவதற்காக நடவடிக்கை மேற்கொண்டுள்ளார். அனைத்து மாற்றுத்திறனாளிகளுக்கும் தனித்துவம் வாய்ந்த அடையாள அட்டைகள் (UDID) வழங்குவதற்கு பல்வேறு அரசு அலுவலர்களுடன் ஒருங்கிணைந்து சிறப்பு முகாம்கள் நடத்தி 13,713 மாற்றுத்திறனாளிகளுக்கு தனித்துவம் வாய்ந்த அடையாள அட்டைகளை வழங்கிட நடவடிக்கை மேற்கொண்டுள்ளார். மாற்றுத் திறனாளிகளுக்கு அனைத்து திட்டங்களும் சென்று அடைவதற்காக பல்வேறு துறைகளுடன் இணைந்து ஒருங்கிணைந்த சிறப்பு முகாம்கள் நடத்தி 6407 பயனாளிகளை கண்டறிந்து ரூ.11.56 கோடி செலவில் மாற்றுத்திறனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கியுள்ளார்.

ஊரக வளர்ச்சி முகமை மூலம் மாற்றுத்திறனாளிகளுக்கு பிரதம மந்திரி குடியிருப்பு திட்டத்தின் மூலம் 25 பயனாளிகளுக்கு இலவச வீடுகட்டுவதற்கு நடவடிக்கை மேற்கொண்டுள்ளார். மேலும் சென்னை பெட்ரோலியம் கார்ப்பரேஷன் நிறுவனம், புவியியல் மற்றும் சுரங்கத்துறை அறக்கட்டளை ஆகியவற்றின் சிஎஸ்ஆர் நிதியில் இருந்து மொத்தம் 89 பயனாளிகளுக்கு பெட்ரோல் ஸ்கூட்டர், மூன்று சக்கர சைக்கிள்கள், காதுக்கு பின் அணியும் காதொலிக் கருவிகள் ஆகிய நலத்திட்ட உதவிகள் ரூ.13.04 இலட்சம் மதிப்பில் வழங்கிட நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்.

தேசிய அறக்கட்டளை மூலமாக சட்டப்பூர்வ பாதுகாவலர் சான்று 125 மாற்றுத்திறனாளிகளுக்கு வழங்கிட நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்.

இவ்வாறு மாற்றுத்திறனாளிகள் நலனில் மிகுந்த அக்கறை கொண்டு சிறந்த முறையில் பணிபுரிந்து வரும் டாக்டர். அ. அருண் தம்புராஜ், இ.ஆ.ப., மாவட்ட ஆட்சித்தலைவர், நாகப்பட்டினம் மாவட்டம் அவர்களை பாராட்டி மாற்றுத்திறனாளிகளின் நலனுக்காக அரும்பணியாற்றிய சிறந்த மாவட்ட ஆட்சித் தலைவருக்கான தமிழ்நாடு அரசின் விருது வழங்கப்படுகிறத

**Dr. A. ARUN THAMPURAJ, I.A.S.,** District Collector has been working in the Nagapattinam district since 17.06.2021. He implements the welfare assistance schemes with more concern on the Differently abled persons. In the Nagapattinam district, he has taken great effort in developing barrier free structures, particularly in the premises of bus stand, integrated court complex, Government Hospitals, Schools, Police stations, etc., Under NABARD 7 Government Buildings have been constructed barrier free structure at the cost of Rs.1.5 lakhs each. The District collector has given UDID cards to 13,713 DAPs through special camps organized in convergence with various departments. The district collector has helped 6407 DAPs to get various assistances at the cost of Rs. 11.56 crore. Through Rural Development Department, under PMAY scheme 25 DAPs were allocated free houses. Under CSR fund mobilized through Chennai Petroleum Corporation Limited and Department of Geology and Mining, totally Rs.13.04 lakh have been mobilized to assist, 89 DAPs to provide retrofitted petrol scooters, tricycles, behind the ear hearing aids, etc., the District Collector has also issued 125 Guardianship Certificates through National Trust.

Hence, the District Collector Dr. A. Arun Thampuraj, I.A.S., has been honored as "**Best Collector**" for his outstanding service for DAPs at Nagapattinam District.

.